**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE COURT**
**CHENGALPATTU**

MCOP No. 137/2024

நாள் – 13.07.2026

PW 1 – ரமேஷ்

(சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்)

2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை –

புகார் நான் கொடுக்கவில்லை. நாங்கள் பயணம் செய்த வாகனத்தில் அன்றைய தினம் மொத்தம் 12 பேர் பயணம் செய்தோம். 12 பேர் பெயர், விவரம் தெரியுமா என்றால் 7 பேர் விவரம் மட்டும் தெரியும். முதல் தகவல் அறிக்கையில் 20 பேர் பயணம் செய்ததாகவும், ஓட்டுநருடன் சேர்த்து 21 பேர் பயணம் செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் பயணம் சென்ற Van ல் 12 பேர் பயணம் செய்யலாம். 12 பேருக்கு மேல் அந்த வாகனத்தில் பயணம் செய்திருந்தால் அது விதிமீறல் என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு ஓட்டுநரின் தவறில்லை என்று சொன்னால் ஓட்டுநர் வேகமாக சென்றார். ஓட்டுநர் வாகனத்தை வேகமாக ஓட்டினார் என்பதற்கு எனது வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு ஆவணங்கள் இல்லை என்று சொன்னால் சரிதான். விபத்தானது வாகனத்தின் டயர் வெடித்ததால் ஏற்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சாலையில் பள்ளம், மேடு, கற்கள், ஆணி ஆகியவை இருப்பதால் டயர் வெடிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். டயர் வெடித்ததற்கு ஓட்டுநர் காரணம் என்று கூறமுடியாது என்று சொன்னால் சரிதான். விபத்திற்கு ஓட்டுநர் காரணம் இல்லை என்றும், சாலையில் இருந்த கூர்மையான பொருட்கள் டயரில் பட்டு டயர் வெடித்ததே காரணம் என்றும் சொன்னால் சரிதான். ஒரு வாகனத்தில் குறிப்பிட்ட அளவிற்கு மேல் எடைகளை ஏற்றினாலும், அதனால் டயர் வெடிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். 12 பேர் பயணிக்கும் Van ல் 20 பேர் பயணித்ததானது குறிப்பிட்ட அளவிற்கு மேல் எடைகளை ஏற்றியது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. குழந்தைகள் என்பதால் அந்த வாகனத்தில் 40 குழந்தைகளை ஏற்றி பயணிக்க முடியுமா என்றால் முடியாது. 12 பேர் செல்லவேண்டிய வாகனத்தில் 20 பேர்

M. Ramesh 13.7.26

சென்றதால் அதிகப்படியான எடை மற்றும் அழுத்தத்தினால் வாகனத்தின் டயர் வெடித்திருக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் சரிதான். அதிகப்படியான நபர்களை வாகனத்தில் ஏற்றுவதானது மோட்டார் வாகன சட்டத்தின் படியும், காப்பீடு விதிகளின் படியும் தவறானது என்று சொன்னால் அதுபற்றி எனக்குத் தெரியாது. விபத்தானது 1ம் எதிர்மனுதாரரின் தவறினால் ஏற்படவில்லை என்றும், இயற்கையினால் டயர் வெடித்த காரணத்தால் விபத்து ஏற்பட்டதால் எனக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் விபத்து இழப்பீடு வழங்க வேண்டிய கடமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் அதிகப்படியான நபர்களை வாகனத்தில் ஏற்றியதால் ஏற்பட்ட அழுத்தத்தினால் வாகனத்தின் டயர் வெடித்ததால் ஏற்பட்ட விபத்திற்கு 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

எனக்கு இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அறுவை சிகிச்சை செய்து பிளேட் வைத்ததால் கை சரியாகிவிட்டது என்றால் சரியல்ல. கையில் வலி உள்ளது. நான் ஒப்பந்ததாரராக வேலை பார்த்து வந்தேன். எனக்கு ஏற்பட்ட காயத்தினால் எனது வேலை பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. எனது ஒப்பந்தத்தை தற்காலிகமாகவோ, நிரந்தரமாகவோ நிறுத்திவிட்டதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மருத்துவ செலவீனங்களுக்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. கையில் வைத்த பிளேட்டை அகற்ற வேண்டும் என்பதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காயம் பரிபூரணமாக சரியாகிவிட்டது என்பதால் எனக்கு இழப்பீடு தொகை வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை - இல்லை**</u>

M. Ram[signature] 13.7.26

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி சொல்ல என்னால் தட்டச்சருக்கு சாட்சி கூறியவாறே சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்துப்பார்த்து சரி என்று ஒப்புக் கொண்டு 13.07.2026 அன்று என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

[signature] 13/7/26

தலைமை குற்றவியல் நடுவர்,
செங்கல்பட்டு.